## சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் – சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் – நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச் சடங்கு ஆகியவற்றிற்கு – வழங்கப்படும் உதவித் தொகை – உயர்த்தி வழங்கப்படுகிறது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3(2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 60

நாள்: **26.09.2019**
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி – புரட்டாசி 9

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.13, பிற்படுத்தப்படோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 20.04.2007.
2. அரசாணை (நிலை) எண்.29, பிற்படுத்தப்படோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 28.03.2008.
3. அரசாணை (நிலை) எண்.60, பிற்படுத்தப்படோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 27.05.2008.
4. அரசாணை (நிலை) எண். 196, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (ஐ1) துறை, நாள். 17.11.2017.
5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடித எண். எப்1/1990/2018, நாள். 24.04.2018.

* * * * * * * *

**ஆணை :**

மேலே ஒன்று மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் சீர்மரபினர் நல வாரியமும், மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியமும் அமைக்கப்பட்டு அமைப்புச் சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் வழங்குவது போன்று மேற்கண்ட வாரியங்களில் பதிவு செய்துக் கொள்ளும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கவும், பதிவு செய்யப்பட்ட தகுதியுடைய உறுப்பினர்கள் இயற்கை மரணம் எய்தினால் குடும்பத்தினருக்கு உதவித் தொகையாக ரூ.15,000/– மற்றும் ஈமச் சடங்கு உதவித் தொகையாக ரூ.2,000/– வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு அமைப்புச்சாரா ஓட்டுநர் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற அமைப்புச்சாரா தொழிலாளர்கள் இயற்கை மரணம்

அடைந்தால் அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் இயற்கை மரண உதவித் தொகையினை ரூ.15,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகையினை ரூ.2,000/–யிலிருந்து ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் கடிதத்தில், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அராசணையில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அரசாணையில் இயற்கை மரணம் எய்தினால் வழங்கப்படும் உதவித் தொகை மற்றும் ஈமச் சடங்கு உதவித் தொகை ஆகியவற்றை உயர்த்தி வழங்கி உத்தரவிடப்பட்டதை போன்று சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகையினை ரூ.15,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், ஈமச் சடங்கு உதவித் தொகையினை ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி ஆணைகள் வெளியிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிகுறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இயற்கை மரண உதவித் தொகையினை ரூ.15,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், ஈமச் சடங்கு உதவித் தொகையினை ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி வழங்க ஆணையிடுகிறது. இவ்வுதவித் தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை இவ்வாரியங்களுக்கான பொது வைப்பு கணக்கில் ஒப்பளிக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா. எண். 47409/நிதி (பி,மி.பி)/19, நாள். 24.09.2019 பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்.

பெறுநர்
சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் – செயலர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை –5.
தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர் – செயலர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை –5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை–9.
அரசு செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட துறை, சென்னை–9.
மாநில கணக்காயர், சென்னை–18.

மாநில கணக்காயர், சென்னை—18, (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை) சென்னை—18.
மாநில கணக்காயர், (தணிக்கை) சென்னை—18. (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை— 5.
நிதி (பி.மி.பி.) துறை, சென்னை— 9.
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை—9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை— 9.
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை—9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை—9.

<u>நகல்</u>
செயலாளரின் தனிச் செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/9/19
பிரிவு அலுவலர்.
26.09.2019